Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 347/2024 PW-1**

Name : தாஸ்
Father / Husband name : அமாவாசை
Village : நெய்குப்பி
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 14.10.2025

Accused present. Both side counsel present.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கார் டிரைவராக உள்ளேன். கனரக வாகன உரிமை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். டேக்சி பர்மிட் வைத்துள்ளேனா என்றால் இல்லை, சொந்தமாக டிராவல்ஸ் நடத்துகிறேன், அதற்கு பர்மிட் உள்ளது. நான் இதை தவிர வேறு வேலை செய்கிறேனா என்றால் இல்லை. நான் சொந்த ஆட்டோவை இரண்டு வருமாக ஓட்டிவந்தேன், பின்னர் இரண்டு காரை வாடகைக்கு ஓட்டிவருகிறேன். இடையில் என்னை ஓட்டுநர் வேலைக்கு அழைத்தால் நான் செல்வேன் என்றால் இல்லை. எதிரியை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் சுமார் 15 வருடங்களாக தெரியும். எப்படி தெரியும் என்றால் நெய்குப்பியிலுள்ள எனது வீட்டிற்கு எதிர் வீட்டில் எதிரி வசித்துவருகிறார். எதிரி என்ன வேலை செய்துவந்தார் என்றால் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார்.

2. எதிரி எப்போது ஓய்வு பெற்றார் என்றால் தெரியாது. எதிரியின் கணவர் என்ன செய்கிறார் என்றால் ஆர்டிஓ அலுவலகத்தில் கையெழுத்து செய்யும் மருத்துவராக உள்ளார். எதிரியின் கணவர் அரசாங்கத்தில் வேலை செய்கிறாரா என்றால் இல்லை, ஓய்வு பெற்றதாக சொன்னார். எதிரிக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் ஒரு பெண் குழந்தை உள்ளது, அவரின் பெயர் பத்மினி மருத்துவராக

உள்ளார். எதிரியின் மகள் எங்கு வேலை செய்கிறார் என்றால் தென்பசியார் ஜேஆர் மருத்துவமனையில் பணிபுரிவதாக சொன்னார். எதிரி மற்றும் அவரின் கணவர் இருவரும் ஓய்வூதியும் பெறுகிறார்கள் என்றால் சரிதான், எவ்வளவு என்று தெரியாது. எதிரியின் மகள் எத்தனை வருடமாக வேலை செய்கிறார், எவ்வளவு சம்பளம் பெறுகிறார் என்றால் தெரியாது. நான் வட்டிக்கு பணம் கொடுப்பேன் என்றால் சரியல்ல, எதிரி அவரின் கணவருக்கு உடல்நிலை சரியில்லை, மருத்துவமனையில் இருப்பதாக சொன்னதால் எனது பிள்ளைகளின் படிப்பிற்காக சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து கடன் கொடுத்தேன்.

3. நான் வங்கியில் பணம் சேமித்து வைத்திருந்தேன் என்றால் வங்கியிலும், கையிலும் சேமிப்பு வைத்திருந்தேன். எனக்கு மாதம் ரூ.30,000/- , ரூ.40,000/- வருமானம் வரும். நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் திண்டிவனம் கிளை கேவிபி வங்கி, யூனியன்வங்கி, இந்தியன் வங்கி ஆகும். மேற்படி வங்கிகளில் நடப்பு கணக்கு வைத்துள்ளேன், சேமிப்பு கணக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் வருமானவரி மற்றும் தொழில் வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு டிராவல்ஸ் வருமானம் மூலமாக வீடு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது குடும்ப செலவிற்கும், வாகனங்களுக்கு காப்பீடு செலுத்தவும் மாதம் ரூ.50,000/- தேவைப்படும் என்றால் சரியல்ல. மேற்படி செலவிற்கு வருமானவரி செலுத்துவதில்லை என்றால் சரிதான், அவ்வளவு சொத்து என்னிடம் இல்லை. எதிரி என்னிடம் இதற்கு முன்பு கடன் வாங்கி திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்னர் ரூ.1,00,000/- கடன் வாங்கி சுமார் 2, 3 மாதத்தில் திரும்ப செலுத்திவிட்டார்.

4. எனது மனைவி என்ன செய்கிறார் என்றால் வீட்டுகுடுத்தினம். அறிவிப்பு எந்த வழக்கறிஞர் மூலம் கொடுத்தேன் என்றால் சண்முகவேல், பிருந்தா. இரண்டு வழக்கறிஞர் மூலம் இரண்டு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் முதலில்

வழக்கறிஞர் பிருந்தா மூலம் ஒரு அறிவிப்பு கொடுத்தேன் அது திரும்ப வந்துவிட்டது, மீண்டும் ஒரு அறிவிப்பு கொடுத்தேன். எந்த தேதியில் முதல் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் நினைவில்லை. எந்த தேதியில் இரண்டாவது அறிவிப்பு கொடுத்தேன் என்றால் நினைவில்லை. மேற்படி இரண்டு அறிவிப்புகளும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எந்த காரணத்திற்காக அறிவிப்பு திருப்பப்பட்டது என்றால் வீட்டில் ஆள் இல்லாததால் திருப்பப்பட்டது. திருப்பப்பட்ட அறிவிப்பில் ஆள் இல்லை என்று தான் உள்ளதா என்றால் உள்ளது.

5. எந்த முகவரிக்கு அனுப்பினேன் என்றால் ரோசனை, ஆஸ்பிட்டல் ரோடு இம்மானுவேல் என்ற முகவரிக்கு அனுப்பினேன், கதவு எண் நினைவில்லை. எதிரிகள் எந்த தேதியில் வீடு மாறினார்கள் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.4 அறிவிப்பில் ஆள் இல்லை என குறிப்பிடவில்லை, கதவு பூட்டியிருந்தது, இரண்டு முறை Intimation கொடுத்ததாக உள்ளது. பொதுவாக கதவு பூட்டியிருந்தால் போஸ்ட் ஆபிசில் பேப்பரில் எழுதி கதவில் வைத்துவிட்டு 7 நாட்கள் வைத்திருப்பார்கள் என்றால் 7 நாட்கள் காத்திருந்ததாக சொன்னார்கள். எதிரி தற்போது எந்த முகவரியில் வசிக்கிறார் என்றால் திண்டிவனம், கிறிஸ்டியன் தெருவில் வசிக்கிறார். புகாரில் எதிரியின் முகவரி என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரோசனை, ஆஸ்பிட்டல் ரோடு, குட்டக்கரை தெரு என குறிப்பிட்டுள்ளேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**